தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆவணி 14, திருவள்ளுவர் ஆண்டு–2047

2016 ஆகஸ்ட் 30, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> *"இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லார்க்கு தன்சொலால்*
> *தான் கண்டனைத்து இவ்வுலகு."*

எளிய மக்களிடம் இனிமையாகப் பேசி, தேவையானதைக் கொடுத்து, உதவி செய்யும் ஆட்சியாளருக்கு, புகழ் தானாக வந்து சேரும். அவர் விருப்பம்போல் குடிமக்களும் அமைவார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

115—

இருவழிச் சாலை

***1309—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதியிலுள்ள அந்தியூர்-ஆதிரெட்டியூர் நெடுஞ்சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[2016 ஆகஸ்ட் 30

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

அந்தியூர் தொகுதி, அந்தியூர் முதல் ஆதிரெட்டியூர் வரை உள்ள ஒருவழிச் சாலையை இடைவழிச் சாலையாக அகலப்படுத்துவது குறித்து அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தமிழக மக்களின் நலன் மட்டுமல்லாமல், எதிர்கால சந்ததியினரும் பயன்பெறும்வகையில் தொலைநோக்குச் சிந்தனையோடு நித்தம், நித்தம் இடையறாது சிந்தித்து, செயலாற்றி, விதி 110-ன்கீழ் அற்புதத் திட்டங்களை அள்ளி, அள்ளித் தரும் அமுதசுரபியாம் எங்கள் அன்னையே, (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் வீற்றிருக்கும் திசை நோக்கி, தங்கள் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, அந்தியூர்-ஆதிரெட்டியூர்-மறவப்பாளையம் சாலையை அகலப்படுத்தி அமைத்திடும்போது, இப்பகுதிவாழ் பொதுமக்கள் மற்றும் விவசாயப் பெருங்குடி மக்களின் போக்குவரத்துக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். இதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் ஒரு வார காலம் நடைபெற்றுவருகின்ற, பிரசித்தி பெற்ற குதிரை மற்றும் கால்நடைச் சந்தைக்குப் பெயர் பெற்றதுமான குருநாத சுவாமி கோயில் விழாக் காலத்தில் மாவட்டத்தின் பிற பகுதிகளிலிருந்து மட்டுமல்லாது, அண்டை மாநிலங்களிலிருந்தும் கால்நடைகள், பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் சென்று வர மாற்றுப் பாதையாகவும், மிகவும் பயனுள்ளதாகவும் அமையும். மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான வழிகாட்டுதல்களின்பேரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதில் மகிழ்ச்சி

2016 ஆகஸ்ட் 30]

அளிப்பதாக உள்ளது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி ஆதிரெட்டியூர் மறவப்பாளையம் சாலையிலிருந்து வெள்ளிதிருப்பூர், செல்லம்பட்டி மற்றும் கொமராயனூர் வழியாகச் சேலம் மாவட்ட எல்லையான கொளத்தூர் சாலையில் இணைந்து, மேற்படி கொளத்தூர் சாலையானது மாதேஸ்வர மலை வழியாகக் கர்நாடக மாநிலத்திற்குச் செல்லும் இணைப்புச் சாலையாகும். எனவே, இந்த இணைப்புச் சாலையின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, ஆதிரெட்டியூர்-மறவப்பாளையம் முதல் சேலம் மாவட்ட எல்லைப் பகுதியான தொட்டிக்கிணறு வரை உள்ள இச்சாலையை அகலப்படுத்தியும், புதிய தார்ச் சாலையாகச் செப்பனிட்டும், பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர்-ஆதிரெட்டியூர்-மறவப்பாளையம் சாலை 7.30 கி.மீ. நீளம் கொண்ட மாவட்ட இதர சாலையாகும். இச்சாலை சேலம் மாவட்டத்தில் உள்ள கொளத்தூரையும், ஈரோடு மாவட்டத்தில் உள்ள அந்தியூரையும் இணைக்கின்ற சாலையாகும். தற்போது இச்சாலை 3.75 மீட்டர் அகலத்தில் உள்ளது. போக்குவரத்துச் செறிவு 2,000 PCU-க்குமேல் இருக்குமானால் அந்தச் சாலை அகலப்படுத்தப்படும். எனவே, இச்சாலையை ஆய்வு செய்ததில் தற்போது போக்குவரத்துச் செறிவு 2,234 PCU ஆக இருப்பதால், இச்சாலையை ஒருவழிப் பாதையிலிருந்து இடைவழிப் பாதையாக 5.5 மீட்டர் அகலத்திற்கு மேம்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்க பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் 'பரிசீலிக்கப்படும்' என்ற பதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் நிச்சயமாக நிறைவேறும் என்பதால் தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

முற்பகல் 10-05

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட ஓவேலி பேரூராட்சியில், கூடலூர் முதல் சீப்புரம் வரையுள்ள சாலையை இலட்சக்கணக்கான மக்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது குறுகிய சாலையாக உள்ளது. இதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக உள்ளது. ஒரு வாகனம் மட்டும்தான் செல்லக்கூடிய நிலை இருக்கிறது. இதனால் விபத்துகள் ஏற்படுகின்றன. இருபுறமும் அகலப்படுத்தி, அந்தச் சாலையை விரிவாக்கம் செய்து கொடுக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விழைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பகுதி மலைப் பகுதியாக இருக்கின்றது. மலைப் பகுதியிலே சாலை அமைக்க வேண்டும் என்று சொன்னால் வனத் துறையினருடைய அனுமதி பெற வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, வனத் துறையினரிடம் அனுமதி பெற்றுத்தான் அங்கே சாலை அகலப்படுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது.*

2016 ஆகஸ்ட் 30]

ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அது தேசிய நெடுஞ்சாலை. கடந்த காலத்திலே, அந்தச் சாலை அமைக்கின்றபொழுது, வனத் துறையினருடைய அனுமதி கிடைக்க காலதாமதம் ஏற்பட்டு, மீண்டும் அனுமதி பெற்றுத்தான் அங்கே சாலையை அமைத்தோம். அதேபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது குறிப்பிடுகின்ற அந்தச் சாலையும் மலைப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே சாலையை அகலப்படுத்த வேண்டும் என்று சொன்னால், வனத் துறையினருடைய அனுமதி பெற வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, 2011-12-ல் 1,708.88 கிலோ மீட்டரும், 2012-13-ல் 1,659.37 கிலோ மீட்டரும், 2013-14 ஆம் ஆண்டு 2,386.98 கிலோ மீட்டரும், 2014-15 ஆம் ஆண்டு 1,478.63 கிலோ மீட்டரும், 2015-16 ஆம் ஆண்டு 975.2 கிலோ மீட்டரும் ஆகமொத்தம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 5 ஆண்டுக் கால பொற்கால ஆட்சியில் 8,209.06 கிலோ மீட்டர் சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்கள்.*

திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்கென வாழாமல், தமிழினத்தைக் காப்பாற்ற தவ வாழ்வு வாழ்ந்து, மக்கள் அனைவரும் தம் உயிர் மூச்சு (மேசையைத் தட்டும் ஒலி) என்று அனுதினமும் மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து, அதனைச் செயல்படுத்திட அயராது உழைத்து வரும் கண் கண்ட தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆறாவது முறையாக அரியணையில் அமர்ந்து ஆட்சி புரியும் இந்த அவையிலே எளிய தொண்டனான என்னையும் அமரச் செய்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, என்னுடைய நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை-மேட்டுப்பாளையம் சாலை, சாய்பாபா கோயில் சந்திப்பு மற்றும் கவுண்டம்பாளையம், நல்லாம்பாளையம் சந்திப்புகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மேம்பாலம் அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியிலே ஆய்வு செய்து, அந்த ஆய்விலே போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்றபட்சத்திலே, உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கான அவசியம் ஏற்படுகின்ற நிலை ஏற்பட்டால், நிதிநிலைக்கேற்ப அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.*

திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அணைக்கட்டு தொகுதி, தங்கக்கோயில் முதல் கந்தனேரி வரையுள்ள சாலையை அகலப்படுத்திக் கொடுத்தால், தினந்தோறும் வருகை தருகின்ற பக்தர்களுக்குச் சிரமம் ஏற்படாமல் இருக்கும். அவர்கள் பயன்பெறக்கூடிய வகையிலே அந்தச் சாலையை அகலப்படுத்தித் தரும்படி தங்கள் வாயிலாக அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கக்கோயில் முதல் கந்தனேரி வரையுள்ள சாலையை அகலப்படுத்த வேண்டும் என்று இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட அளவு சாலையை அகலப்படுத்துவதற்கு*

2016 ஆகஸ்ட் 30]

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பகுதியினுடைய போக்குவரத்துச் செறிவின் அடிப்படையிலே சாலை விரிவுபடுத்தப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தச் சாலையும் ஆய்வு செய்யப்பட்டு, அந்த ஆய்விலே போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்றபட்சத்தில் சாலையை விரிவுபடுத்துவதற்கு நிதிநிலைக்கேற்ப அரசால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரத்திற்கு இணையாக கிராமப்புற தார்ச் சாலைகளைச் சீராக அமைத்து, சிறப்பான ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நெடுஞ்சாலைத் துறையில் தார்ச் சாலைகள் போடும்போது, கிராமம் வழியாக நிறைய நெடுஞ்சாலைகள் செல்கின்றன. அந்தக் கிராமத்திற்குள்ளாக தார்ச் சாலைகள் போடாமல்* paver block *அமைத்தால், குடிநீர் குழாய் அமைக்க தோண்டுவதற்கோ அல்லது மின்சாரம் கொண்டு செல்ல தோண்டுவதற்கோ அந்தக் கற்களை அகற்றிவிட்டு,* easy-*யாக தோண்டுவதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே, அந்தக் கிராமங்களில்* paver block *சாலைகள் போடுவதற்கு அரசு முன்வருமா எனக் கேட்டு அமர்கிறேன்.*

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரைக்கும் எல்லாச் சாலைகளும்* Paver block machine *மூலமாகத்தான் போடப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதைச் சுட்டிக்காட்டுகின்றார் என்று சரியாகப் புரியவில்லை. (குறுக்கீடுகள்)* paver block *கல்லைப் பதிக்க வேண்டுமா?*

ஆகவே, paver block கல்லைப் பதிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். ஒரு குறிப்பிட்ட தூரமாக இருந்தால் paver block கற்களைப் பதிக்கலாம். கிராமச் சாலைகளைப் பொறுத்தவரைக்கும் கிட்டத்தட்ட 4, 5 கிலோ மீட்டர் சாலை நீளமாக இருக்கின்ற காரணத்தினால் அவ்வளவு தூரத்திற்கு paver block கற்களைப் பதிக்க முடியாது. ஆகவேதான் தார்ச் சாலை அமைக்கப்படுகின்றது. குறுகிய பகுதியாக இருந்தால், நீர்வழிப் பகுதியாக இருந்தால், பாதிக்கப்படுகின்ற பகுதிகளிலே paver block கல்லால் அமைக்கப்பட்டிருக்கின்றது. மலைப் பகுதிகளிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, அந்தப் பகுதிகளிலெல்லாம் நீர் வழிந்து ஓடுகின்றபோது அந்தச் சாலை பாதிப்புக்குள்ளாகிறது. அவ்வாறு பாதிப்புக்குள்ளாகின்ற பகுதிகளிலே paver block கற்களைப் பயன்படுத்தி அமைக்கின்ற சூழலை அரசு எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

116—

துணை மின் நிலையம்

***2050 திரு. வி.ஜி. ராஜேந்திரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் தொகுதி, பாப்பரம்பாக்கம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்கும் பணியை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?